KEMENTERIAN PEMBANGUNAN LUAR BANDAR

KEMAS

# KERATAN AKHBAR

# சமூக மேம்பாட்டு இலாகா ஒரு பார்வை

எஸ்.வெங்கடேஷ்

KEMAS

## அறிமுகம்

சமூக மேம்பாட்டு இலாகா அடிப்படையில் இளையோர் கல்விப் பிரிவு என்ற பெயரில் அறியப்பட்டது. இந்தப் பிரிவு கடந்த 1961ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் துன் அப்துல் ரசாக்கால் தோற்றுவிக்கப்பட்டது.

1957ஆம் ஆண்டில் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் பெருமளவில் இளையோரும் சிறுவர்களும் கல்வி அறிவு பெறவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

அன்றைய சூழ்நிலையில் நாட்டின் வளர்ச்சிக்கு முன் வைக்கும் திட்டங்களுக்கு இது பெரும் தடையாக இருந்து வந்தது.

இந்த விவகாரத்தைச் சரி செய்யும் வகையில் இந்த இளையோர் கல்விப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இன்று புறநகர் மேம்பாட்டு அமைச்சின் கீழ் செயல்படும் சமூக மேம்பாட்டு இலாகா புறநகர் வாழ் மக்கள் நல்வாழ்விற்கு வித்திடும் என்ற கொள்கையை முதன்மைப்படுத்துகின்றது.

அரசாங்க உருமாற்றத் திட்டம் மற்றும் நாட்டின் முன்னேற்றக் கோட்பாட்டின் அடிப்படையில் குறிப்பாக புறநகர் வாழ் மக்கள் வாழ்வாரத்தை உருமாற்ற இந்த இலாகா முனைப்புக் காட்டுகின்றது.

இந்த இலாகா புறநகர் வாழ் மக்களுக்கு வழங்கும் முக்கியத் அடிப்படை வசதிகளையும் அப்பகுதி வாழ் மக்களுக்கு சிறந்த முறையில் கிடைக்க முன்னுரிமை வழங்கப் படுகின்றது.

அதே சமயம் புறநகர் வாழ் பகுதி மக்கள் குறிப்பாக வறுமையில் உள்ளவர்கள், இளைஞர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள் மத்தியில் முதல் நிலை அறிவாற்றல் கொண்ட நவீன மய மக்களை உருவாக்கவும் முனைப்புக் காட்டப்படுகின்றது.

புறநகர் வாழ் மக்களின் வருமானத்தையும் பெருக்க பல்வேறு திட்டங்கள் இந்தக் கோட்பாட்டின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் வாழ்வாதார செலவுகள் அதிகரித்துள்ள வேளையில் அதனை எதிர்கொள்வதற்கு பி40 பிரிவைச் சேர்ந்த மக்களையும் தயார்ப்படுத்துவதற்கு இந்தத் திட்டங்கள் உந்துதலாக அமைகின்றன.





பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

குறிப்பாக புறநகர் வாழ் மக்களுக்கு Quick Win KEMAS எனும் செயல்பாடு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

கணினி, ஒப்பனைக் கலை, சமையல் கலை, கைத் தொழில்

PINTAR STREAM அமைந்துள்ளது

இந்தச் செயல்பாட்டில் கலை மற்று நன்னெறிப் பண்புகள் (சமயம்) ஆகி துறைகளும் இணைக்கப் பட்டு STREAM என விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

### TABIKA KEMAS PINTAR STRE

**இலக்கு**

1. சிறார்கள் மத்தியில், தொழில்நுட் சார்ந்த துறைகள் மீது ஆர்வம் ஏற்படுத்துதல்.
2. இந்த STREAM கல்வி முறை மேலும் பயனளிக்க அதில் கற்றல்-


மக்கள் ஓசை
HARIAN TAMIL MAKKAL OSAI SUARA RAKYAT

| | |
|---|---|
| KERATAN BERTARIKH: | 8 OKTOBER 2020 |
| HARI : | KHAMIS |
| RUANGAN: | - |
| HALAMAN: | 3 |